சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு (1889-ம் ஆவணி மீ 28-ம் உ.

சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் 94 ] யாழ்ப்பாணம்: - ருதிரோற்காரி ஞு, வைகாசி மீ 20, 27-5-83, வெள்ளிக்கிழமை [இல -18,

# திருநீற்றின் செம்மை திகழ்த்திச் சிவனெறி தெருட்டிய திருஞான சம்பந்த நாயனர்

## இறைவனடி முறை முறையில்ஏத்த எழும்பயன் எடுத்துக் காட்டியதொண்டர்



திருச்சிற்றம்பலம்

மறையினெலி கீதமொடு பாடுவன பூதமடி
மருவிவருவார்
பறையினெலி பெருகநிகழ் நட்டமமர் பட்டிசர்
மேயபணிகூர்
பிறையினெடு மருவியதோர் சடையினிடை
யேற்றபுனல் தோற்றநிலைமாம்
இறைவனடி முறைமுறையின் ஏத்துமவர்
தீத்தொழில்கள் இலர மிகவே.
திருச்சிற்றம்பலம்

சமயகுரவருக்குப் பூசை நிகழ்த்திச் சிவப் பணி புரிதலே குருபூசையின் மகத்துவம். அவ்வாறு திருத்தொண்டர்களை எண்ணி இறைவனை இறைஞ்சும்பொழுது அந்த அடியார்கள் ஆன்ம கோடிகளுக்கு ஆற்றிய தொண்டுகளையும்பற்றி ஊன்றிச் சிந்தித்தல்வேண்டும். அவ்வாறு சிந்தை செய்வதற்குக் குரவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமுறைகள் உண்டு. இவையே எங்கள் தவப் பேறும் எங்களுக்குப் புத்தி புகட்டியவண்ணம் இருக்கின்றன; மதிமொழி கேட்டு நல்விதி வழி வாழத் திருமுறைகளைக் காலையும் மாலையும் ஓதுதல் ஒரு உத்தம முறை.

வசனெலியின் அதிகாலை ஒசப்படும் திருமுறைக் கானம் இவ்வகையிற் பெரிதும பயன் தரும்.

திருப்பட்டீச்சரம் பதிகத்தில் ஆருவது திருக்கடைக்காப்பு மேலே காட்டப்பெற்றிருக்கின்றது. பட்டி என்ற பெயருடையவளும் காமதேனுவின் மக்களில் ஒருவளும் ஆன இப் பெண்ணணங்கு பூர்வபுண்ணியவசத்தால் இத்தலத்திலே ஈசனை ஏத்தித்தொழும் பேறு பெற்ற வரலாற்றில் எழுந்தது இத்தலப்பெயர்.

ஞானசம்பந்தப்பெருமானுக்கு முத்துப் பந்தர் ஆன நிகழ்ச்சியுண்டல்லவா? அந்தப் பெரும் பேற்றினைச் சிந்தித்துக் கவுணியர்கோன் இப் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தனர்.

பதிகத்தின் ஆறும் பாட்டை எடுத்துக் கொண்டால் ஒரு புத்திமதியைப் பொருத்தமாகப் பெறுகின்ருேம். தீத்தொழில் மலிந்து பொலிந்து வரும் இக் காலத்திலே "தீத் தொழில்கள் இல்லராய்" இருக்கவெனின் அதற்கு வழி ஒன்றுண்டு என்று சிவஞானச் செல்வக் குழந்தை பொற்ருளம் போட்டுப் பாடிப் பரவசமடைந்த நிகழ்ச்சிகள் பல சுட்டிக் காட்டுகின்றன.

இறைவனடியே புகலிடம். அனுற் புகலிடத்திற் புகுவதற்கும் ஒரு கட்டுப்பாடுண்டு. முறையாகமட்டுமன்றி மூன் இறை அளவும் பிறழ்ந்து இறைவனை ஏத்தினலன்றி தீத்தொழில் மேவா நிலைமை எய்த முடியாது. மயக்கத்தின் தாக்கம் ஏற்படாதிருக்கக் கையாளப்படவேண்டிய நெறி இறை வழிபாடே. அந்த வழிபாடே முறையாகவிருக்கவேண்டும்.

---

### திருஞானசம்பந்தர் குருபூசை

திருஞான சம்பந்தர் குருபூசை 29-5-83 ல் சைவ பரிபாலனசபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வழமை போலச் சிறப்பாக நடைபெறும்.

---

### ஆச்சிரமத்தில் அப்பரடிகள் குருபூசை

சைவ உலகைப் பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருளில்மூழ்கவிடாது கரப்பற்றி சமயகுரவர்களுள் மூத்தோரான அப்பர் சுவாமிகளின் குருபூசை யாழ் - சைவ பரிபாலன சபை ஆதரவிற் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 07 - 05 - 83 சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்ச்சியாகச் சபைநாவலர் ஆச்சிரமவளவில் உழவாரத் திருத்தொண்டு நடைபெற்றது. இப் பணியில் யாழ் மத்தியகல்லூரிமாணவர்களும் - யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களும்கலந்துகொண்டனர்.

முற்பகல் 9 மணியளவிற் பூசை வழிபாட்டுடன் விழா ஆரம்பமானது. விசேட பூசையையடுத்து நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் அருளாசி வழங்கினர்கள்.

அதை யடுத்து, 'ஆத்ம ஜோதி' ஆசிரியர் நா. முத்தையா, இந்துக் கல்லூரி ஆசிரியர் சோ. பத்மநாதன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். பண்ணிசை வேந்தர் வே. சிவஞானம் ஆகியோர் திருமுறைப்பண்ணிசை நிகழ்ச்சியை நடத்தினர். பண்

(வளர்ச்சி 2ம் பக்கம்

---

## மாவைக் கந்தன்

### பதிகமும் அதன் உரையும்

( பதிகத்தின் முதலாம் பாட்டும் அதற்குரிய உரையும் இங்கே அந்த நூலிலிருந்து எடுத்து வெளியிடப்படுகின்றன )

தேவர்சிர மீதுதன திரடிகள் சூடிமிகு
சீர்புகழ வார்வமுடனே
சேவைபுரி வோர்சுரர தாதியர்க ளேசமொடு
தேனினிசை பாடியினிதாய்
மேவிநட மாடவது நாடிமகிழ் வோடுறையு
மேலமரர் கோமகனெனும்
மேதகுதெய் வானையொடு மானுதவு மோர்கொளின
வேடர்மக டாளுமுறவாய்
ஆவியென மேவியிரு பாலுமுனை நாடிமகிழ்
வாயமர ஞானவடிவே
லாயுதமின் வீசியுன தோர்கரம தாகவுற
வாடுமயின் மீதுவருவாய்
மாகலிய மேதிமிசை பாசமுட னுடியெமை
மாமறலி யோடிவருநாள்
மாகமுகு வாழைபல வானளவி யேநிறையு
மாவைநகர் வாழ்முருகனே.

உரைநடை:- மா, கமுகு, வாழை பல வான் அளவியே நிறையும் மாவை நகர் வாழ் முருகனே மா மறலி எமை நாடி மா வலிய மேதிமிசை பாசமுடன் ஓடிவருநாள் தேவர் சிரமீது தனது (இந்திரனுகிய தனது) ஈரடிகள் சூடி மிகுசீர் புகழ ஆர்வமுடனே சேவை புரிவோர்கள், சுரதாதியர்கள் நேசமொடு மேவி, தேனின் இசை பாடி இனிதாய் நடனமாட அது நாடி மகிழ்வோடு உறையும் மேல் அமரர் கோமகன் என்னும் மேதகு தெய்வானையொடு, மான் உதவும் ஏர்கொள் இள வேடர் மகள் தானும் உறவாய் ஆவி என இருபாலும் மேவி உனை நாடி மகிழ்வாய் அமர, ஞானவடிவேல் ஆயுதம் மின்வீசி உனது ஓர் கரமதாக உற ஆடு மயில் மீது வருவாய்

பதவுரை:- மா, கமுகு வாழை பல வானளவியே நிறையும் மாவை நகர் வாழ் முருகனே - மா, கமுகு, வாழை, பலா ஆகிய மரங்கள் ஆகாயத்தை முட்டி எங்கும நிறைந்திருக்கும் மாவிட்டபுரமாகிய நகரத்தின்கண் வாழ்கின்ற முருகக் கடவுளே, மா மறலி எமை நாடி மாவலிய மேதிமிசை பாசமுடன் ஓடிவருநாள் - கருநிறங்கொண்ட இயமனுனவன் எனது உயிர் கவரும்பொருட்டு என்னைத்தேடி மிக்க வலிமையை உடைய எருமைக் கடாவின் மேல் ஏறி பாசமாகிய கயிற்றோடு விரைந்து வருகின்ற நாளிலே தேவர் சிரமீது தனது ஈரடிகள் சூடி மிகு சீர்புகழ்- தேவர்கள் தமது தலைகளின் மேல (இந்திரனுகிய) தனது இரண்டு பாதங்களையும் அணிந்து தனது புகழைக் கூறவும்; ஆர்வமுடனே சேவை புரிவோர்கள் சுரதாதியர்கள் நேசமொடு மேவி தேனின் இசைபாடி இனிதாய் நடமாட - விருப்புடனே தமக்குத் தொண்டு செய்கின்றவர்களாகிய தேவதாசிகள் அன்புடனே வந்து தேன்போலினிய இசைப்பாக்களை பாடிக்கொண்டே இன்பத்துடன் நடனம் ஆடவும்; அது நாடி- அவ்வின்ப நிகழ்ச்சியை நோக்கி; மகிழ்வோடு உறையும்- மகிழ்ச்சியோடு வீற்றிருக்கின்ற; மேலமரர் கோமகன் எனும் மேதகு தெய்வானையொடு வானுலகத்து வாழும் தேவர்களுடைய அரசனுகிய இந்திரனுடைய மகளென்று சொல்லப்படுகின்ற மேன்மை பொருந்திய மகள் தானும் உறவாய்- மான் பெற்ற அழகு பொருந்திய இளமையை உடைய வள்ளியம்மையாரும் அன்பு கொண்டு; ஆவியென இருபாலும் மேவி- தேவரீரைத் தமக்கு உயிர் குயிரெனக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கவும்; ஞான வேலா

(வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

## இந்துசாதனம்

ருதிரோத்காரி௵ வைகாசி ௴
20-5-83 27-5-83, வெள்ளி

## ஒழுக்கநெறி ஓங்க ஒரே ஒரு வழி

•••○•••

எதுசரி எது பிழை என்பதை இவ்வுலகில் எமக்குக் காட்டுவது எம் மனச்சான்றே. 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்று சாற்றப்படுவதைச் சாதாரணமான மக்கள் நன்கறிவர், 'நெஞ்சிற் குறுட்டுச் சொல்வீரா' என்று உணர்ச்சியுடன் கேட்கப்படுகின்றதைப் பொதுமக்கள் மத்தியில் அடிக்கடி காண்கின்றோம். பிழை என்றறிந்தும் அகம் பிரமம் என்ற அகந்தையால் உந்தப்பெற்று வழுவியுற்றுவது மன்றி அது வழுவன்று என்று வாயாடுவார்கள் இவ்வுலகில் அநேகர் உளர். நெஞ்சை ஒழித்தொரு வஞ்சகமில்லை என்பது பொதுமொழி.

கவுருவத்தை வைரவ சுவாமி கோயிலிலே மிருக பலியிட விரும்புவோரை அவ்வாறு பொல்லாப்பிழையாக அத் தீமையை ஆலயத்திற் செய்யாது அன்பு நெறியிலே அவர்களைத் திசை திருப்புவதற்கு வழி வகுப்பதைச் செய்யாம் முற்படுகின்றோம் இல்லை. அரசசட்டத்திலூல அத்தீமையை விலத்துவதுதான் ஒரே ஒருவழி என்று காலத்தை அவமே கழிக்கின்றோம்.

சட்டம் என்பதின் ஆற்றல் தான் எம்மட்டோ? ஓர் உதாரணத்தை எடுத்துரைப்போம். மதுபோதையில் விசைவண்டி ஓட்டினால் அச்செயல் கண்டு பிடிக்கப்பட்டால் அக்குற்றம் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டால் குற்றம் புரிந்தவருக்குத் தண்டனை இடம் பெறுகின்றது. ஆனால் இந்தச் சட்டம் இயற்றும் அரசு மது விலக்குச் சட்டத்தை இயற்று திருப்பதுவு மன்றி மதுபோதைப் வடிசாலைகளை நிறுவியும் நிறுவ ஆதரவளித்தும் மது சாலைகளிலிருந்து வரி அறவிட்டும் வருகின்றதே இப்படியான சூழ்நிலையில் மதுபோதைகுள்ளாகின்றவர்களை மட்டும் குற்றஞ் செய்வோர் என்று கூறிவிட்டு இதற்கு மூலகாரணமான மதுவை ஒழிக்க முயலாதிருக்கும் சமுதாயத்தைப் பற்றி என்ன சொல்வது.

குற்றந் தவிர் என்று சொல்வதுதான் சமயக் கொள்கை- தவிர் என்று கூறும் பொழுது தவிர்க்கின்ற கடமை குற்றம்புரிகின்றவர் இடத்திலேயே சுமத்தப்படுகின்றது,

மிருக பலி என்ற பெரிய பழியைப் பற்றி இது பிழை என்று எடுத்தோத வேண்டியதில்லை. உயிரினின்றும் உடம்பை நீக்கும் உரித்து ஒருவருக்குமில்லை இயல்பாக நீங்கும் பொழுதே ஏற்ற வைத்தியம் செய்யப்படவில்லை, மருத்துவம் நோயைத் தவறாக புரிந்து விட்டது. கொஞ்சம் கூடிய கவனம் எடுத்திருந்தால் இந்த உயிர் பிரிய வேண்டி வந்திராது என்றெல்லாம் எங்களுக்குட் கூறிக் கொள்ளுவதைச் சற்று ஊன்றி நோக்கினால் ஆறறிவு படைத்த அருமை மனிதன் இயல்பாகவே இரக்கம் உள்ளவன் என்பது தெரியவரும்.

அப்படியாருக் என் இரக்கமற்றவனாகின்றான் ஒழுக்கந்தவறவே எல்லா இழுக்கும் தானாகத் தொடரும், இந்த உண்மையை அறிய சாத்திரங்கள் கற்க வேண்டியதில்லை சட்டத்தை அறிய வேண்டியதில்லை இவ் உலகில் கன்றும் தாயும் என்ற கருணை உறவை மனிதன் உணர்ந்தால் எவருக்கும் தீமையிழைக்க மாட்டான். எனவே கவுணவத்தைக் கருமத்தைப் பற்றிக் கருத்துக் கொடுத்தால் சமயி என்ன செய்வலாம்!

உண்மையான சைவ சமயஞ் சார்ந்தவர்கள் மிருக பலியிடுமிடத்தில் அரனை வழிபடச் செல்லவே மாட்டார் பழமை இது வழமை, பரம்பரை மரபு என்று சொல்லிக் கொண்டு கொல்லும் குற்றம்புரிகின்றவர்களை யார் தான் என்ன செய்ய முடியும். இப்படியான செப்படி வித்தைக் காரர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஏன் விரதமிருந்து புலால் உணவைக் கைவிடுகின்றனர். புலால் பொருந்தா உணவென்று அவர்களுக்கு ஒரு உணர்ச்சி இருப்பதனாலன்றோ!

ஏற்ற நெறியை விட்டு மாறுவழியிற் செல்கின்றவர்களும் ஒருகால் உணர்வர், உணர்ந்து உய்யும் நெறியை நாவலர். ஆகவே ஒழுக்க நெறி என்பதைப் பச்சிளம் பாலப் பருவத்திலிருந்து மக்கள் உணர வைப்பதற்குரிய ஆக்க வேலையைச் செய்வோம் சின்னஞ்சிறு பாடநூல்களாக வாசிப்பவர்கள் இலகுவாக விளங்கும் வகையில் அன்பு நெறியைப் பற்றி கருத்தை வெளியிட்டு மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் இதனை அறிய வழிவகுத்தல் வேண்டும்.

## சிவசம்பந்தந் தருவன சைவக் கிரியைகள்

### திருமுறைகளை உணர்ந்து ஓதுங்கள் சிவனையே தினமும் பணியுங்கள்!

———0———

#### நாவலர் நவின்ற கருத்துக்களைச் சிந்தியுங்கள்

[ 07-08-83 அன்று பிற்பகல் அப்பர் குருபூசைவிழாத் தொடரில் நிகழ்ந்த கொடிபாசர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் போது சபை சமயப் பிரசார அமைச்சர் மு. மயில்வாகனம் ஆசிரியர் வெளியிட்ட கருத்து வருமாறு:— ]

"தெய்வம் சிவமே, சிவனருள் சமயம் சைவம். சைவம் சிவத்தொடு சம்பந்தம்". சைவர்களாகிய நாங்கள் புரிகின்ற கிரியைகளெல்லாம் சிவசம்பந்தத்தைத்தரக்கூடியனவாக இருக்கவேண்டும். இந்த உண்மைகளையே வேதசிவாகமங்கள் கூறுகின்றன. இக் கருத்துக்களையே ஐந்தாம்குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தாம் எழுதிய முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகள் பாலபாடங்கள் முதலிய நூல்களிலே கூறியிருக்கின்றார். இக்காலத்திலே நமது சைவ மக்கள் இவ்வுண்மைகளை மறந்து சைவத்திற்கு முரணான சமய வாழ்க்கையை அநுட்டிக்கிறார்கள் என்பதை நோக்கும் பொழுது மனம் மிகவும் வேதனைப் படுகின்றது.

இக்காலத்தில் சில சைவமக்கள் கிறீஸ்தவ கோயில்களுக்கு பிட்டு, இடியப்பம், தோசை முதலியவற்றைத் தானமாக வழங்கி அங்கே கூடும் சனங்களுக்குத் தானம் செய்கிறார்கள். இப்படிச் செய்வதால் தங்களுடைய நேர்த்திகள் கைகூடுமென்று செய்யப்படும் பிரசாரங்களை நம்புகிறார்கள் சைவமக்கள். இப்படிச் சைவ மக்கள் செய்வது சைவசமயத்திற்கு இழுக்காகும். இது ஒரு பாரதூரமான சிவ நிந்தனையாகும்; சைவத் திருமுறைகளைப் பாராயணம் செய்தால் சைவக் கோயில்களை வழிபட்டால் இஷ்ட சித்திகள் கைகூடும். சிவ நெறியைக் காப்பாற்றுங்கள்.

## திருவாசகமும் திருக்கோவையாரும்

[ கவிஞர். முருகவே. பரமநாதன் ]

[13-05-83 இதழின் வளர்ச்சி —2. ]

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியுமெனப்
பனிவரும் கண் பரமன் சிற்றம்பலமனையாய்
துனிவரு நீர்மையிதென்னென்று தூ நீர் தெளித்தளிப்ப
நனி வரு நாளிது வோவென்று வந்திருக்கும் நன்னுதலே

காதலர்களுக்கிடையேயுள்ள அன்பின் உச்ச நிலையை இப்பாடல் கோடிகாட்டுகிறது. தலைவன் பொன்னே வாழ்வின் உயிர்ப்பு என்றதும் மூர்ச்சையான பெண்- தலைவன் பிரவாதிருந்தும் தெளிந்து எழும்- அற்பகணம் கூட- தன் தலைவனைப் பிரிந்திருக்க முடியாதவளாய்- பிரிந்த காலம் மிகப் பெரிய இடைவெளியுடையதாய்- அமைந்து விடக் கண்டாள், கணம் பல வருடங்களாகத் தென்பட்டது. அவளுக்கு என்றால் பிரிவுத்துயர் எவ்வளவு கஷ்டமான தெனபது தலைவன்போல உய்த்து உணரக்கூட முடியாத தொன்றாகும். மனைவியிடம் எல்லையற்ற அன்புகாட்டும் தலைவன் போல உயிருக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள இடையீடற்றது. இமைப்பொழுதும் நெஞ்சிலிருந்து விட்டோமேயென்று எமமை எண்ணிப்பார்த்தோமா அதுவும் இல்லை. இதைத் திருவாசகத்தில் எடுத்துப் பார்ப்போம.

வினையென்போல் உடையார் பிறர் ஆர்
உடையான் அடி நாயேனைத்
தினையின்பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று
மற்று அதனாலே
முனைவன் பாத நன்மலர்பிரிந் திருந்தும்
நான்முட்டிலேன் தலைகிறேன்
இனையன் பாவனை இரும்பு, கல்மனம், செவி
இன்னது என்று அறியேனே

என்னிலும் கொடியார் யாருமில்லை; இறைவனுடைய திருக்குறிப்பு. என்னைப் பிரித்துவைப்பதன்று. ஆயின் வினைப்பயனே பிரிந்து ஏற்கிறேன். இந்நிலையை உணர்ந்து பதைப்புத்துடிப்புக் கொண்டேனோ என்றால் அதுவுமில்லை, அதை எண்ணி எண்ணித் தலையை மோதவில்லை. மோதிப்பிளக்கவுமில்லை. எனமனம இரும்பிலும் இறுக்கமானது. கல்லிலும் கடிது என்று கவலைப்படுகிறார் மணிவாசகம் பெருந்தகை. தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் சன்மார்க்க நெறியில் நின்ற பெருமானல்லவா.

இவ்வாறு இரட்டைக் குழவிகளான திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போதெல்லாம் அளப்பரிய காட்சிகளை யெல்லாம் காணலாம. ஆம் நினைவளவு நேரமேனும் பிரிந்திருப்பது திருக்குறிப்பன்று எனவும் தில்லையும் முனிவரும் மன்னரும் விரும்பியதை நிறைவேறப் போகின்றதென்று சொன்னபோதே பிரிவு நிலையை எண்ணி வாடிய தலைவியின் நிலையையும் எண்ணிப்பார்த்தால இறைவனுடைய அருட் செயலைக் குறிப்பாய் நாம் தூரப் போய் கொண்டிருப்பதைக் காணலாம.

மணிவாசகப் பெருமான் தன்னையே அர்ப்பணித்த அடியவர் தம்மை மறந்து பாடிய பாடல்கள் திருவாசகமும் திருக்கோவையாரும். அவருடைய பாடல்கள் உலக உயிர்களை உய்விக்கும் திறமைமிக்கன சிற்றின்ப தெறியில் நிற்கும் நல்லுயிர்களை அவ்வுயிர் வாழ்விலேயே வாழவைத்து, இம்மைவாழ்விலேயே மறுமை வாழ்வையும் காட்டியமைந்தகர். அவருடைய திருவாசகம் நல்ல தோறும், நயம் தோறும் நயமான சிந்தனைகளை அள்ளு தேனைப்போல அளிக்கின்றன. சிற்றின்ப வாழ்வோடு பேரின்பவாழ்வாகிய வீட்டு நெறியையும் பிணைப்பித்துச் செல்லும் நூல திருக்கோவையார் எனலாம், சிற்றின்பவாழ்வையும் பேரின்பவாழ்வையும் இணைத்துப் பாடிய பாடலொன்றை இனிப்பார்ப்போம.

"உணர்ந்தார்க்குணர்வரியோன்
தில்லைச்சிற்றம்பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்
செவ்வாய் இக்கொடியிடைதோள
புணர்ந்தாற் புணருந்தொறும்
பெருகபோகம் பின்னும் புதிதாய்
மணந்தாழ் புரிகுழலாள்
அல்குல்போல் வளர்கின்றதே"

இத் திருப் பாட்டிலே மாணிக்கவாசகர் இரு வேறு வீட்டின்பங்களையும் இணைத்து அவை பெறப்பெற உற்று உணர உணர துய்க்கத்துய்க்க எல்லையற்று

( வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

## ஞானசம்பந்தர்குரு பூசை

நல்லூர் கலைப்பிரியா முத்தமிழ் மன்றம் வைரவ விநாயகர் கோவிலில் 29-5-83 ஞாயிற்றுக்கிழமை ஞான சம்பந்தர் குருபூசையை நடாத்தவுள்ளனர்.

---

சைவமாம் சமயம் சாரல்

## "என்றுமுள மூன்று பொருள்"

(முன் வளர்ச்சி)

வேதம் சிவாகமம் என்பவற்றை முதல் நூல்களாகக் கொள்ளும் சைவம்; அவற்றிலே இந்த முப்பொருள்களைப் பற்றிய கருத்து வலித்துரைக்கப்படுகின்றது இந்த இறைவனின் இலட்சணத்தை நால்வர் செந்தமிழிற் பாட்டாம் அர்ச்சனை ஆற்றும்பொழுது யாவரும் அறிய இலகுவாகச் சொல்லிப் பணிந்தனர்

ஒன்றாய்ப் பலவாய், ஏகன் அநேகன், குணமிலனாய்க் குறியிலனும், உருவாய் அருவாய் இன்னும் அருவுருவாய், ஆநந்தமாய் அழற்பிழம்பாய் என்றெல்லாம் கூறிப் பேதுண்மையாக என்றுமுளன் என்று சொல்லி அவ்வாறு நித்தியமாயுள்ள பொருளைச் சிவனென்று அன்பினால் அழைத்தனர்; அடியார்கள் எனவே பரிபூரணப் பொருள் பதி

காரணகர்த்தாவாய். ஆனால் அக் கர்த்தாவுக்கோர் கர்த்தா இல்லாமல் இருக்கும் பூரணனை ஈசனுக் கொள்வர் சைவ சமயிகள்

யோனிவாய்ப் படாமை என்ற நிலைமை வேறொருவரில்லா இறைவனுக்கே புண்டு இந்த உண்மையை எடுத்துக் காட்டி விரித்து ஞானத்தை வளர்ப்பது சைவம்

பிறந்தார், வாழ்க்கைப் பெரும்பேறு பெற்றார் என்று உயர் நிலையிலுள்ள உயிர்கள் இறையாகா. யோனிவாய்ப் பட்டார்க் கெல்லாம் இன்னலும் இடுக்கணும் அல்லலும் ஆணவமும் தொடரும் அவ்வாறெனின் அவர்கள் அருளாக அமைதல் எங்ஙனம்?

சைவம் இறைவனையும் இறைநெறி நிற்போரையும் பிரித்துக் காட்டிப் பதியின் தனித்துவத்தை விளக்கும்.

இவ்வண்ணம் அமைந்த சைவமாம் சமயம் ஏனைய உண்மைப் பொருள்களாப் பசு, பாசம் என்பனவற்றை அவற்றின் இயல்புகளை எடுத்துக்காட்டி எவ்வண்ணம் பதியையடைய முடியும் என்ற வழியையும் காட்டுவதால இஃது உண்மை மார்க்கம் என்று விளங்குகின்றது.

இனி இறை என்று உணருகின்றவர்கள் இந்தப் பொருள் சிந்தைக்கும் அப்பாற்பட்ட செம்பொருள் என்பதனையும் உணருவர், இந்த அநுபவம் தான திருமுறைகளில் வரும் சிவஞானம் சிவாலயங்களிலே திருமுறை ஓதும் நியமம் அடியார்கள் இறை உண்மையை உணார்த்துமியவே இருக்கின்றது.

(வளரும்)

# தாமோதரனார் வரலாறு

(தாமோதரனார் முத்திரை வெளியீட்டு வைபவச் சார்பாக யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையார் வெளியிட்ட சி. வை. தா வின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி இச்சுருக்கத்தை எழுதியவர் திரு. க. சிவலிங்கராசா அவர்கள்)

சி. வை தாமோதரம் பிள்ளையவர்களின் தமிழ்ப் பணிகள் பன்முகப் பட்டவை அவருடைய பணிகளுட் பதிப்புப் பணியே முதன்மையானதாகக் கருதப்படுகின்றது, பிள்ளையவர்கள் பதிப்பாசிரியராயும், நூலாசிரியராயும், போதனாசிரியராயும். உரை நடையாசிரியராயும், தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வாளராயும், பாடசாலை நிறுவுனராகவும் பணியாற்றியுள்ளார்கள். பிள்ளையவர்கள் வாழ்ந்த காலத்தில் உண்மையான தமிழ்த் தொண்டாக, அத்தியாவசியமான தாகக் கருதப்பட்டது பதிப்புப்பணியேயெனலாம். ஆறுமுகநாவலர் சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையர் போன்ற தமிழறிஞர்கள் பதிப்புப் பணியில் ஈடுபட்டிராவிடில் இன்றைய தலைமுறை, இணையிலாத் தமிழ்ச் செல்வங்கள் பலவற்றை இழந்திருக்கும், ஆங்கில மோகமும், அதனாலெழுந்த மேலைத்தேய வாழ்க்கை முறைகளும், பழந் தமிழ் நூல்களைப் படிக்கவும் பாதுகாக்கவும் வழி செய்தில, மிக உயர்ந்த இலக்கிய இலக்கணங்கள் ஆதுவாரற்று ஓலைச்சுவடியாகவே உயிரை மாய்த்துக் கொண்டிருந்தன. தீயாலும் நீராலும் கறையானாலும், சுவடிகள் அழிந்தொழியும் நிலையைக்கண்டு தாமோதரம்பிள்ளை கண்ணீர் வடித்தார். அவர் கண்ணீர் அவர் பதிப்பித்த நூல்களின் பதிப்புரையிலே பேராறாக ஓடுவதைக் காணலாம்.

"மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்ற நிலையே அக்காலத்தில் நிலவியது. சமய, சமூக, பொருளாதாரக் காரணிகள் இந் நிலைக்குப் பக்க பலமாகவே காணப்பட்டன. கோப்பாய் சதாசிவபாடசாலை ஆசிரியரான தாமோதரப்பிள்ளை "நீதிநெறி விளக்கவுரைப்" பதிப்போடு பதிப்புத்துறையிற் காலடி எடுத்து வைக்கிறார். இவ்வாறு அவர் அன்று வைத்த 'முதலடி' யைத் தொடர்ந்து இறக்கும் வரை தனது பாதச் சுவடுகளைப் பதிப்புத் துறையிலே மிக ஆழமாகவே பதித்துச் சென்றுள்ளார்.

"உயர்ந்த நீதிபதி உத்தியோகத்தில் அமர்ந்த பரோபகார முயற்சிகளிற் பங்குபற்றிக் குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்த

---

## மாவைக் கந்தன் பதிகமும்

(1 - ஆம் பக்கத்து வளர்ச்சி)

யுதம் மின் வீசி உனது ஓர் கரமதாக உற- ஞான வடிவாகிய கூரிய வேல் என்னும் ஆயுதம் ஞான ஒளியை வீசிக்கொண்டே தேவரீருடைய ஒப்பற்ற கையினிடத்ததாகப் பொருந்தவும்; ஆடுமயில் மீது வருவாய்- இலங்குகின்ற ஆடுதலையுடைய மயிலின் மீதேறி மிக மிக விரைந்து வருவீராக,

---

## திருவாசகமும் திருக்கோவையாரும்

(2 ம் பக்கத்து வளர்ச்சி)

வளர்ந்து கொண்டே இருப்பவை என்ற உண்மையை உணர்த்தியுள்ளார், இருவேறு நிலையின் எல்லைகளில் இறுதியில் உள்ள இன்பங்களையும் அவற்றின் வளரும் தன்மையையும் காட்டியுள்ளார். எனவே பிரபஞ்ச வாழ்வியலை விடவும் முடியாமல் பரமார்த்த வாழ்வைப் பற்றவும் முடியாமல் வாழும் மனித குலம் உய்வதற்கு வழிகாட்டும் வாசகமும் கோவையும் நம்மிருகண்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அவற்றைப் படித்தால் இறுதியில் நமச்சிவாயவே நமது ஊதியம் என்ற முடிவுக்கு நம்மை வரச் செய்யும் என்பதை மட்டும் மனதிலே அழுத்தம் திருத்தமாகப் பதிப்போமாக

---

## அனைத்துலக ஆராய்ச்சி அவை அவசியம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்து சமய நிகழ்ச்சிகள் யாவும் காலம் காணப்படாத நிலையிலேயே நூல்களிற் காணப்படுகின்றன. காலங் காணப்பட்டவையும் அநுமானிக்கப்பட்டவையாகின்றன,

ஒன்றை மட்டும் உதாரணத்துக்கெடுத்தால், சைவசமய குரவர்களின் கால நிர்ணயம் ஒன்றேபோதும், பல வேறு விதமாகக் காலம் வகுக்கப்பட்டிருக்கும், சமய குரவர்களின் சரித்திரங்களை ஒப்பு நோக்கி ஒரு முடிவுக்கு வருவதற்கும் உரிய முறையிலே ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்படவில்லை, (வளரும்)

---

ஆனையிறவு தட்டுவன்கொட்டி அருள்மிகு கண்ணகி அம்பாள்

## மகா கும்பாபிஷேகம்

நிகழும் மங்களகரமான ருதிரோற்காரி வருடம் ஆனி மாதம் 3 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (16-6-33, ஸப்தமி திதியும், பூரநட்சத்திரமும் கன்னி லக்கினமும் கூடிய பகல் 12.09 மணி முதல் 1-50 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

---

நோய்வாய்ப்பட்டு; பல கஷ்டங்கள் நேர்ந்த போதும பின்னை காரியத்திற் கண்ணாகவே இருந்தார்" என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் கூறுவது மிகவும் பொருத்தமானதே.

ஆறுமுகநாவலரின் பதிப்புப் பணிக்குத் 'தோள்கொடுத்துத் தோன்றும் துணையாக இருந்த சி' வை. தா அவர்கள் நாவலரின் ஆசியோடும், வழிகாட்டலோடும் 1868-ம் ஆண்டு தொல்காப்பியம் சேனாவரையம் உரைப்பதிப்பினை வெளியிட்டார், இப்பதிப்பின் பரிசோதனை வேலையை நாவலரவர்களே செய்துதவினர் என்றும் அறியமுடிகின்றது.

தமிழ்நூற் பதிப்புத்துறையில் ஆறுமுகநாவலருக்குத் தனியானதும், சிறப்பானதுமோரர் இடமுண்டு. "நாவலர் பதிப்புச் சுத்தப் பதிப்பு" என்ற தொடர் நாவலர் பதிப்பாகவே குறைகச் சுத்தப் பதிப்பைக் குறித்துநின்றதை அறிஞர்கள் அறிவர். ஆறுந பதிப்புத் துறையில் ஈடுபட்ட பிள்ளையவர்கள், பதிப்புத்துறையின் நுட்பங்களை, முறையியலை நன்குணர்ந்து செயற்பட்டமையை அவரது பதிப்புக்கள் நிலை நிறுத்துகின்றன. பிள்ளையவர்களின் பதிப்பு முயற்சியை நூல்கள் வெளி வந்த கால அடைவில் வைத்து நோக்கும்பொழுது அவரின் பதிப்புத்துறையறிவு வளர்ச்சியை நூலகுவிற் கண்டு கொள்ளலாம்; பழந்தமிழ் இலக்கிய வெளியீடுகள்பற்றித் திரு. வி, க. குறிப்பிடும் போது இவ்வாறு சுட்டிச் செல்லுவர்.

"பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால்கொண்டவர் ஆறுமுகநாவலர். சுவரெழுப்பியவர் தாமோதரம்பிள்ளை. கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் உ. வே. சாமிநாதையர்."

பழந்தமிழிலக்கியப் பதிப்பு முயற்சியில் எஸ். வையாபுரிப் பிள்ளை போன்ற "பதிப்புச் சூறாவளி" கள் ஈடுபடும் பொழுது, கால்கொண்டவரும், சுவரும் அசையாதிருக்கக் கூரை ஆட்டம் கொடுத்ததை நவீன மூலபாடத் திறனாய்வாளர் அறிவர்.

சி. வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புக்கள் ஆராய்ச்சிக்குட்பட்டவையாய், மிகச் சிறந்த நீண்ட பதிப்புரைகளுடன் வெளிவந்தன. சி. வை. தாவின் பதிப்புரைகளைத் தொகுத்து யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம் தாமோதரம் என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றது. இப்பதிப்புரைகள் தமிழ் இலக்கிய வரலாறாகவும், பதிப்பு முயற்சிகளின் 'தாற்பரியத்தை'ப் புலப்படுத்துவனவாகவும், மூலபாடத் திறனாய்வுப் பொக்கிஷமாகவும் திகழுகின்றது எனலாம். இப்பதிப்புரைகள் கற்றோர் நெஞ்சத்தை நெகிழவைப்பனவாகவும். "உழைப்பின்" சின்னமாகவும் திகழுகின்றன.

---

## மகத்தான வைபவம் மாவையில்

மாவைக் கந்தன் பதிகம் என்னும் பத்திரச நூல் இலக்கண வித்தகர் பண்டிதர், வே. சங்கரப்பிள்ளை அவர்களின் உரையுடன் நன்கு பதிக்கப்பெற்று முருகபத்தன் முன்னைக் கிராமசிகாரி, மயிலை சி. கதிரேசு அவர்களினாவாக 13-05-83 மாலை மாவைக் கந்தன் வசந்த மண்டபத்தில் இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் தலைமையில் மாவை முத்தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்பட்டது,

மாவை ஆதீன கர்த்தா மகாராஜ் ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் வெளியீட்டுரை பகரும் பொழுது இக்கைங்கரியம் அரிய பாக்கியமாய் அரிய அறிஞரால் ஆறுமுகப்பெருமானுக்கு அர்ச்சிக்கப் பெற்றதென்று வாழ்த்தினர்.

வரவேற்புரை மன்ற இசை இயக்குநர் இசைமாணி பொன் முத்தக்குமாருவால் நிகழ்த்தப்பெற்றது. கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயரும் கலாநிதி பண்டிதர் க. சச்சிதானந்தமும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

சமாதான நீதவான் வ. சரவணமுத்து அவர்கள் பாராட்டுரை செய்தனர், கலைப்பேராசு பொன்னுத்துரை நன்றியுரைத்தனர்.

நூலாசிரியரும் உரையாசிரியரும் தங்கள் உள்ளக் கிடக்கையை எடுத்துரைத்தனர். சொற்பொழிவு விரிவு அடுத்த இதழில வெளிவரும்.

---

## ஆச்சிரமத்தில் ... ...

(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

டிதை ச. அமிர்தாம்பிகை கம்பன் கழகச் செயலாளர் திரு. ச, ஜெயராசா ஆகியோர் அப்பர் அருள்நெறி பற்றி உரை நிகழ்த்தினர்;

நண்பகல் சிவனடியார் பூசை மாகேசுரபூசை என்பன நடைபெற்றன; பிற்பகல் 3 மணியளவில் யாழ் சைவ மகளிர் மன்றத்தினராலே திருமுறை ஓதல் நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

பிற்பகல் 4 மணியளவில் புராணபடன நிகழ்ச்சி நடந்தது. அதையடுத்துச் சிவனடியார் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியிற் சபை சமயப் பிரசார அமைச்சர் சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் அவர்களும், இணுவையூர் திருப்புகழ். தியாகராச சுவாமிகளும் கலந்து கொண்டு நடத்தினர்.

புராணபடன வித்தகர்கள் திரு, சி. தியாகராசா, திரு. சி- மருதபிள்ளை ஆசிரியர் முருகர் உல்லாசர், எஸ். சுப்பிரமணியம். ஆகியோர் கலந்துகொண்டு பயன் மிக்க கருத்துக்களை எடுத்துரைத்தனர். அவற்றுள் முக்கியமானது சித்தாந்த சிரோமணி மு, மயில்வாகனம் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது; (இதனைப் பிறிதோரிடத்திற் காண்க.)

# HINDU ORGAN

Fri. 20, 27-5-83

## SACRIFICE OR SACRILEGE!

In the name of religious practice, the most heinous crime of slaughter of animals is being done. And how conveniently the criminals take cover under the stimulating term "Sacrifice"

What then does this word Sacrifice stand for? Penitence, penance, propitiation, are some of the words used in the context of explaining an act of sacrifice. Offering an apology for one's sins to a deity is a common practice where a person does a great sacrifice in making oneself small before God and confessing to one's guilt in one's actions in one's life time. Such a step is possible for persons who unwittingly commit crimes and repent later on their own. Here the sacrifice is their pride

Then there is the other person who realises his guilt in his questionable activities but thinks that the Family Deity will be satisfied if offerings of things that are priceless are made. Parting with a coveted possession is one form-gold, jewels. Thus the act of sacrifice varies in value; also it varies in character

Some entertain the funny idea that sacrifice of animals in their possession also would be adequate recompense for requesting pardon for sinful acts.

Animals when in one's possession may be some sacrifice if parted; but when they are slaughtered for one's sake can this act be considered anything other than an offence against good morals.

Jesus the Christ sacrificed his life for the benefit of mankind. But can those who had him crucified claim that they had also offered a sacrifice to the Lord.

Mahatma Gandhi's peerless life was taken away by an assassin. Surely the murderer has not given a sacrifice; The sacrifice was Gandhiji's

Thus it will be seen that the slaughter of animals in sacred places of worship becomes an act of calculated carnage-massacre of the innocents. It cannot be sacrifice by any stretch of the imagination. On the other hand, it is a commercial bargain with scope for a black market

The person who presumptiously calls himself a devotee, offers a goat and no sooner it is dealt a deadly blow, the carrion is sold to the highest bidder and that arrogant devotee returns home with his purse full of money.

What a sacrifice! How bold it is for those who aid an abet the commission of this crime to attempt to hoodwink the Hindu Public saying that the treacherous transaction was SACRIFICE. If this sinister scheme has acquired the force of custom, then the significance of custom in its purest form will lend itself to ludicrousness.

The bluff must now be called; slaughter of animals in places of worship is therefore a savagery, a heinous crime;

## He Added Grace TO JOURNALISM

The Morning Star, A senior contemporary of ours, has lost the dedicated services of a devoted journalist who had been guiding this well-known weekly for almost four decades. Journals belonging to religious denominations, generally have to function in water-tight compartments for the simple reason that their entire attention has to be devoted to matters religious. But by a strange coincidence, the Hindu Organ and the Morning Star whilst giving full consideration for religious affairs, have been making bold to express explicit opinions on matters pertaining to the general welfare of the people. Such a broadening of the scope of the editorial expressions of these weeklies has necessarily led the Editors to the need to comment on political affairs. We who have always been wedded to the ethical code so exquisitely established by Mahatma Gandhi in his journalistic duties, also have found in our contemporary another exponent of classic journalism

Mr. Lyman S. Kulathungam as Editor of the Morning Star had risen to great heights in giving true expression to the feelings of the minorities in their demand for justice and fair play. He has been a consistent advocate of the Gandhian approach to political issues.

The passing away of such a strong-willed clear-thinker who never failed to wield his willing pen in the cause of the oppressed is certainly an irreparable loss. Editors pass away but their candid expressions live longer. Let that be our solace in this instance of helplessness

## HINDU HOME IN THE NORTH

The Hindu Parishad (Sri Lanka branch) has initiated a scheme to establish a Hindu Home in Jaffna to enable all Hindus have the benefit of an adequately provided Centre for religious studies, and practice and also to accommodate visiting Hindu Preachers.

This project is a boon to the Hindus. Hence unstinting support is called for from Hindus all over the Island.

In this context we regret to have to state that, the Hindu Public have failed in their elementary duties. The Northern Peninsula, where Hindus have several religious institutions in addition to ancient Temples and Madams' has been a favoured centre for pilgrimages, cultral contracts and spiritual seminars. On such occasions the need for a HINDU HOME to serve the requirements of visiting dignitaries and delegates as far as their lodging is concerned, is very keenly felt. Homes catering for similar gatherings of other religious denominations are in existence. But ironically enough the premier place of Hindu activities, the Jaffna Peninsula, has been denaied this privilege by Hindus themselves. Now that the Hindu Parishad has thought it imperative that this urgent demand should be supplied, it is for the Hindu public to extend their enthusiastic assistance to the sponsors and take this laudable endeavour to its logical end—the establishment of the Hindu Home

—O—


## The Jaffna Co-operative Stores Ltd.

420, Hospital Road — Jaffna.

WHEREAS Mrs. Easwariammal Selvadurai – Legal Heir of the Estate of Late Mr. Muttu Selvadurai of Kings Avenue, Urumpirai East, Urumpirai, has applied to the Directors of the above named Company for the issue of a Duplicate Certificate in respect of Nine (9) Ordinary Shares, numbered: 720 - 722; 982; 1157 – 1158; 6956 – 6958, registered in the name of her late husband Mr. Muttu Selvadurai, the original of which is represented to have been destroyed, lost or mislaid; NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for Duplicate Certificate, the original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
20th. May, 1983. 2

C. SRI MANOHARAN,
Secretary


## HINDU PARISHAD

*(Sri Lanka Branch)*

At a meeting of the general body of the Hindu Parishad, the following Office bearers were elected for the ensuing period.

*President:*
Sri Yogendra Duraisamy

*Vice Presidents:*
Shri A. V. Mailvaganam
Shri S. Sivaramalingam
Shri T. Somasundaram

*Secretary:*
Shri E Sabalingam

*Treasurer:*
Shri K. Velmurugu

— —

## SOMETHING TO STIMULATE OURSELVES

Dr. I. D. S. Weerawardena, B. A; Ph. D. (Lond.) in his 'Government and Politics' of Ceylon 1931-1946 has made reference to the establishment of the Hindu Organ in a captivating manner. It is ironical that most Hindus are indifferent to the value of such enterprises

**Here are the extracts**

" From 1870 onwards Government decided to make Grants in Aid to private schools, Within a few years of this decision, the Christian Schools trebled the number of pupils"

" A literary revival followed, The emphasis as was to be expected, was laid on Oriental Languages The revival led by Valwita Saranhara in the Kandyan Kingdom was taken up in 1870 SIMILARLY IN THE NORTH, THE REVIVAL WAS SUPPORTED BY THE ESTABLISHMENT OF THE HINDU ORGAN IN 1889"

Shall we not remember this great service with characteristic feeling of gratitude to the Founding Leaders of the Saiva Paripalana Sabhai?

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna. (Telephone: No. 22336) on Friday, 20, 27-5-83*

Editor in Chief:
R. N. Sivapirakasam